14th December 1959]

Marmalong Bridge, Saidapet

* 37 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to construct a bridge in Saidapet, Madras, to replace the Marmalong bridge which is getting old and could not cope up with increasing heavy traffic; and

(*b*) if so, what is the estimated cost?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Rs. 30 lakhs.

Bridge across the Cauvery

* 38 *Q.*—SRI M. KARUNANITHI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

குளித்தலையையும், முசிறியையும் இணைக்கும் வகையில் காவேரியாற்றின் குறுக்கே பாலம் ஒன்று அமைக்கும் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளதா ?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI S. M. ANNAMALAI : சார், முசிறியில் இருந்து குளித்தலைக்குப் போகவேண்டுமென்றால் ஏறத்தாழ ஐம்பது அறுபது மைல்கள் சுற்றிப் போக வேண்டிய நிலை இருக்கிறது. அந்தக் காரணத்தையொட்டி இந்தப் பாலத்தைக் கட்ட சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அந்தப் பாலத்திற்கு அதிகப் படியான செலவு செய்ய வேண்டியதாக இருப்பதினால், தற்சமயம் நிதி நிலைமையைக் குறித்தும் இப்போது எடுத்துக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : குளித்தலைக்குப் பக்கத்தில் பெட்டவாய்த்தலையில் சர்க்கரை ஆலை ஆரம்பித்திருக்கிறார்கள். முசிறியில் இருந்து கரும்பு கொண்டு வருவதற்கு இந்தப் பாலம் கட்டப்படுவது இன்றியமையாததாக இருப்பதினால் இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கு சர்க்கார் ஆலோசனை செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது குறிக்கப்படுகிற இடத்திற்குக் கிழக்கேயும், மேற்கேயும் பாலம் இருக்கிறது. ஆனால் சிறிது தூரம் போகவேண்டியிருக்கிறது. சர்க்கரை ஆலை இருக்கும் காரணத்தினால் பாலம் அவசியம்தான் என்பதை ஒப்புக் கொள்கிறேன். இருந்தாலும் நிதி நிலைமையையும் கவனத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.